# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**ST.C.No. 397/2022 P.W. 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | சுதந்திரதாசன் | **Caste** | : | |
| **Father's Name** | : | வேதையன் | **Calling** | : | |
| **Village** | : | உள்ளிக்கோட்டை | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | 57 |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 15.09.2025**

**முதல் விசாரணை :**

நான் மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண ஆணையுறுதி ஆவணம் மூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக பாவித்துக்கொள்ள வேண்டி இந்நீதிமன்றத்தை பணிந்து வேண்டி கேட்டுக்கொள்கிறேன். எனது தரப்பு சான்றாவணங்களாக பின்வருவனவற்றை குறியீடு செய்கிறேன்.

| **வ. எண்.** | **ஆவணங்கள் விவரம்** | **குறியீடு செய்யப்பட்ட விவரம்** | **ஆட்சேபனை** |
|---|---|---|---|
| 1 | 06.05.2022 ம் தேதியிட்ட காசோலை -அசல் | ம.சா.ஆ.1 | N.A |
| 2 | 10.05.2022 ஆம் தேதியிட்ட மன்னார்குடி ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி கிளையின் ரிட்டன் மெமோ - அசல் | ம.சா.ஆ.2 | N.A |
| 3 | 23.05.2022 ஆம் தேதியிட்ட புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழகறிஞர் அறிவிப்பு அலுவலக நகல். | ம.சா.ஆ.3 | N.A |
| 4 | 24.05.2022 ம் தேதியிட்ட அறிவிப்பை எதிரி எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை - அசல். | ம.சா.ஆ.4 | N.A |

எனது புகார் படி உத்தரவாக மன்றத்தை பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 20.11.2020 முதல் 17.12.2020 வரையான காலக்கட்டத்தில் எதிரிக்கு பல பரிவர்த்தனைகளில் ரூ.17 லட்சம் கொடுத்துள்ள நிலையில் அதற்கான ஆதார ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய புகார்மனு, நிரூபண ஆணையுறுதி ஆவணம் ஆகியவற்றை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

என்னால் தாக்கல் செய்யப்பட்ட நிரூபண ஆணையுறுதி ஆவணத்தில் 2 வது பக்கத்தில் மேற்படி கடனில் அசலை திரும்ப தரும்வகையில் எதிரி தனது கணக்கு உள்ள கரூர் வைசியா வங்கி ஸ்ரீரங்கம் கிளையில் பணம் பெற்றுக்கொள்ளுகிற வகையில் புகார்தாரர் பெயருக்கு ரூ.30 லட்சத்திற்கு 06.05.2022 ம் தேதியிட்டு காசோலை புகார்தாரரிடம் கொடுத்துள்ளார் என குறிப்பிட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அசல் தொகை ரூ.30 லட்சத்திற்கு எதிரி எனக்கு காசோலை கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

எதிரி என்னிடம் கைமாற்று கடனாக எவ்வளவு தொகை வாங்கினார் என்றால் ரூ.37 லட்சம் வாங்கினார். என்னுடைய புகார் மனுவில் கைமாற்று கடன் என்று குறிப்பிட்டுவிட்டு மீண்டும் கடனில் அசலை மட்டும் திரும்ப தரும் வகையில் காசோலை கொடுத்ததகாக சொல்லியிருப்பது ஏற்படையது அல்ல என்றும், புகார் நிலைநிற்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. ரூ.37 லட்சம் தொகை என்பது கைமாற்று கடன் தான். வட்டிக்கு கொடுத்தது அல்ல என்றால் சரிதான். எதிரி ஆறு மாதத்தில் திருப்பி தந்துவிடுவதாக பேசிக்கொண்டும், இல்லை என்றால் 1 பைசா வட்டி தருவதாக பேசிக்கொண்டோம்.

மேற்படி 6 மாதம் என்பது எந்த காலக்கட்டம் என்றால் 2020 டிசம்பர் முதல் ஆகும். அப்படி இல்லை என்றால் மொத்ததொகைக்கு வட்டியுடன் சேர்த்து தருவதாக பேசிக்கொண்டோம். அவ்வாறு பேசிக்கொண்டதற்கான ஆதார ஆவணங்களை என்னுடைய வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த விபரங்களை என்னுடைய புகார் மனுவிலோ, நிரூபண ஆணையுறுதி ஆவணத்திலோ குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றும், இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

நான் என்ன வேலை பார்ககிறேன் என்றால் Export தொழில் செய்து வருகிறேன். நான் அதில் என்ன வருமானம் வருகிறது என்று வழக்கு ஆவணங்களில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எதிரி எனக்கு எத்தனை வருடங்களாக பழக்கம், எதிரியின் வருமானம் எவ்வளவு போன்ற விபரங்களை வழக்கு ஆவணங்களில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் வருமான வரி செலுத்தும்

நபரா என்றால் செலுத்திவருகிறேன். எத்தனை வருடங்களாக என்றால் 20 வருடகங்களாக செலுத்தி வருகிறேன். 20 வருடமாக வருமான வரி செலுத்தும் நிலையில் ரூ.49000 க்கு மேல் பண பரிவர்த்தனை செய்ய வேண்டுமானால் வங்கி மூலமாக தான் செய்ய வேண்டும் என்கிற விபரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி தகவல் 5 ஆண்டுகளுக்கு முன்பு தான் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான் கடைசியாக ரூ.20 லட்சம் கொடுத்ததாக சொல்லியுள்ள தேதியில் எதிரி என்னிடம் எத்தனை காசோலைகள் மற்றும் வேறு ஆவணங்களை கொடுத்தார் என்றால் காசோலை கொடுக்கவில்லை. புரோநோட்டுதான் கொடுத்தார். எதிரி எப்போது காசோலை கொடுத்தார் என்றால் 2022 ம் மே மாதம் 06 ம் தேதி என்னிடம் காசோலை கொடுத்தார். 1 ½ வருட இடைவெளியில் நான் எதிரியை அனுகி கொடுத்த பணத்தை திருப்பி கேட்டேனா அல்லது சட்டப்படியான நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் சட்டப்படியான நடவடிக்கை எடுக்கவில்லை. அலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டேன். எப்போது கேட்டேன் என்றால் தினமும் கேட்டுக்கொண்டிருந்தேன். என்னுடைய அலைபேசி எண் என்னவென்றால் 9842377168 ஆகும். எதிரியின் அலைபேசி எண் என்னவென்றால் மனப்பாடமாக தெரியாது. போனில் உள்ளது.

1 ½ வருடமாக தினமும் எதிரிக்கு போன் போட்டு பேசுவதாக சொல்லும் நிலையில் அவருடைய அலைபேசி எண் தெரியாது என்று சொல்வது நம்பும்படியாக இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி கொடுத்ததாக சொல்லக்கூடிய கடனுறுதி சீட்டானது தற்போது யாரிடம் உள்ளது என்று சொன்னால் என்னிடம் தான் உள்ளது. மேற்படி கடனுறுதி சீட்டுஎன்னிடம் தான் உள்ளது என்கிற விபரத்தை நான் வழக்கு ஆவணங்களில் சொல்லவில்லை என்றும், இதனால் வரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் என்னிடம் தான் உள்ளது. நீதிமன்றம் சொன்னால் தாக்கல் செய்வேன்.

*(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)*

**Sd—J. Tamizhmurugan,**

**Judicial Magistrate No.I,**

**Mannargudi.**